புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

எண்: 04/TD/DTC/PA/2015/ புதுச்சேரி, தேதி: 08.07.2015

செய்திக் குறிப்பு

## திருபுவனையில் புதிய போக்குவரத்து கிளை அலுவலகம் திறப்பு

புதுச்சேரியில் நாள்தோறும் மக்கள் பயன்படுத்தும் வாகன எண்ணிக்கை பெருகி வருகிறது. வாகன எண்ணிக்கை பெருகியதற்கேற்ப வாகனங்கள் தொடர்பான சேவைகளும் அதிகரித்துள்ளன.

பொதுமக்களுக்கு போக்குவரத்துத் துறையின் சேவைகள் அருகாமையில் கிடைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 2014-2015 வரவு செலவு திட்ட அறிக்கையில் புதுச்சேரியில் ஒவ்வொரு தாலுகாவிலும் போக்குவரத்துத் துறையின் கிளை அலுவலகங்கள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பினை நடைமுறை படுத்துவதற்காக அதிகாரப் பகிர்வு மற்றும் புதிய அலுவலகங்கள் தொடங்குவதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் தொடாச்சியாக வில்லியனூா் தாலுகாவிற்கான கிளை அலுவலகம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

திருபுவனை கூட்டுறவு நூற்பாலை வளாகத்தில், முன்னா் கூட்டுறவு வங்கி செயல்பட்டுவந்த கட்டிடத்தில் வில்லியனூர் தாலுகாவிற்கான வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகம் மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்களால் 08.07.2015 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. திருபுவனை தொகுதி சட்டமன்ற உறுப்பினா் திரு.அங்காளன், போக்குவரத்துத் துறை செயலர் திரு.வி.கந்தவேலு, இ.அ.ப., போக்குவரத்து ஆணையர் திரு.எஸ்.டி.சுந்தரேசன், புதுச்சேரி வட்டார போக்குவரத்து அலுவலா் திரு.ரகுநாத், உழவர்கரை வட்டார போக்குவரத்து அலுவலா் திரு. ரேமண்ட் பெர்னாண்டஸ், புதிய கிளை அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பாலசுப்ரமணி மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து கிளை அலுவலகத்தில் வில்லியனூர் தாலுகாவைச் சேர்ந்த பொது மக்களுக்கு ஓட்டுனர் உரிமம் வழங்குவதில் தொடங்கி வாகனம் தொடர்பான பல்வேறு சேவைகள் வழங்கப்பட உள்ளது. ஒவ்வொரு சேவைகளை வழங்கும்பொழுதும் அது தொடர்பான அடிப்படை ஏற்பாடுகளை செய்த பினனர் தொடங்கவேண்டும் என்பதால், படிப்படியாக அனைத்து சேவைகளும் புதிய அலுவலகத்தில் செயல்பாட்டுக்கு வரும். பொது மக்கள் மேற்படி அலுவலகத்தை அணுகி அதன் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்